கலைஞரின் கனவு இல்லம் ஊரக வீடுகள் பழுது பார்த்தல் திட்டத்தின் கீழ்

5,898 பயனாளிகளுக்கு ரூ.155.28 கோடி மதிப்பீட்டில் பணிஆணைகள்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர், ஆக. 15 - அரியலூர் மாவட்டம், வாலாஜாநகரம் ஊராட்சி, அன்னலட்சுமி இராஜ பாண்டியன் திருமண மண்டபத்தில் அரியலூர் சட்டமன்றத்திற்குட்பட்ட அரியலூர், திருமானூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 1563 பயனாளிகளுக்கும், செந்துறை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியத்தைச் சேர்ந்த 1543 பயனாளிகளுக்கும் மற்றும் ஜெயங்கொண்டம் சுபம் திருமண மண்டபத்தில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், தா.பழூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 2792 பயனாளிகளுக்கும் என மொத்தம் 5,898 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லம் மற்றும் ஊரக வீடுகள் பழுதுப் பார்த்தல் திட்டத்தின் கீழ் ரூ.155.28 கோடி மதிப்பீட்டில் பணி ஆணைகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கலைஞரின் கனவு இல்லம் மற்றும் ஊரக வீடுகள் பழுதுப் பார்த்தல் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு பணி ஆணைகளை வழங்கி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:

தமிழகத்தில் கிராமங்களில் உள்ள குடிசை வீடுகள் இருப்பதன் நிலையறிந்தும், வீடுகள் கட்ட முடியாமல் இருக்கும் ஏழை, எளிய மக்களின் நிலை உணர்ந்து அவர்களுக்கு வீடுகளை கட்டித் தரவேண்டும் என்று இந்தியாவிலேயே முதன் முதலில் வீடு கட்டித் தரும் திட்டத்தினை ஆரம்பித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்தான் கிராமத்தில் உள்ள குடிசை வீடுகளை கான்கீரிட் வீடுகளாக கட்டித்தரும் திட்டத்தினை செயல்படுத்தினார். அதனை பார்த்த பிறகுதான் இந்தியாவில் மற்ற மாநிலங்களில் அதனை பயன்படுத்தினார்கள். இந்திய அரசம் அந்த திட்டத்தை கையில் எடுத்து அதனை செயல்படுத்தினார்கள். 2006 - 2011 ஆண்டுகளில் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தினை கொண்டு வந்தார்கள். குறிப்பாக நமது அரியலூர் மாவட்டம், குடிசைகள் மிகுந்த மாவட்டமாக இருந்தது. கோடைக் காலங்களில் அடிக்கடி தீ விபத்துகள் ஏற்படும் சூழல் இருந்தது. அதனை மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இத்திட்டத்தை கொண்டு வந்தார்கள்.

பிறகு ஆட்சிமாற்றம் ஏற்பட்டு இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது. மிகவும் குறைவான எண்ணிக்கையில் தான் வீடுகள் கட்டுகின்ற வாய்ப்புகள் வரும். மத்திய அரசும் அந்த எண்ணிக்கையை குறைத்து கொண்ட சூழலில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் இருக்கின்ற ஏழை, எளிய மக்களுக்கு வீடுகளை கட்டித்தர வேண்டும். அது நல்லமுறையில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அதற்கான நிதியினை ஒதுக்கி கடந்த ஒருவாரகாலமாக கலைஞரின் கனவு இல்லம் கட்டும் பணிகளுக்கான ஆணைகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி அரியலூர் மாவட்டத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 4200 வீடுகள் கட்டப்பட இருக்கிறது. அதேபோல் ஏற்கனவே இருக்கின்ற வீடுகளில் பழுதுப் பார்பதற்கு 1698 வீடுகளுக்கு நிதி வழங்கப்பட இருக்கிறது.

இதில் அரியலூர் சட்டமன்றத்திற்குட்பட்ட அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 420 பயனாளிகளுக்கு ரூ.1470 இலட்சம் மதிப்பீட்டிலும், கிராமப்புற வீடுகள் பழுதுப் பார்க்கும் திட்டத்தின் கீழ் 185 பயனாளிகளுக்கு ரூ.99.91 இலட்சம் மதிப்பீட்டிலும், திருமானூர் ஊராட்சி ஒன்றியத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 552 பயனாளிகளுக்கு ரூ.1932 இலட்சம் மதிப்பீட்டிலும், கிராமப்புற வீடுகள் பழுதுப் பார்க்கும் திட்டத்தின் கீழ் 406 பயனாளிகளுக்கு ரூ.190.59 இலட்சம் மதிப்பீட்டிலும், செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 1296 பயனாளிகளுக்கு ரூ.4536 இலட்சம் மதிப்பீட்டிலும், கிராமப்புற வீடுகள் பழுதுப் பார்க்கும் திட்டத்தின் கீழ் 247 பயனாளிகளுக்கு ரூ.124.63 இலட்சம் மதிப்பீட்டிலும் பணிகள் மேற்கொள்வதற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 662 பயனாளிகளுக்கு ரூ.2317 இலட்சம் மதிப்பீட்டிலும், கிராமப்புற வீடுகள் பழுதுப் பார்க்கும் திட்டத்தின் கீழ் 380 பயனாளிகளுக்கு ரூ.181.17 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 850 பயனாளிகளுக்கு ரூ.2975 இலட்சம் மதிப்பீட்டிலும், கிராமப்புற வீடுகள் பழுதுப் பார்க்கும் திட்டத்தின் கீழ் 219 பயனாளிகளுக்கு ரூ.106.28 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் தா.பழூர் ஊராட்சி ஒன்றியத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 420 பயனாளிகளுக்கு ரூ.1470 இலட்சம் மதிப்பீட்டிலும், கிராமப்புற வீடுகள் பழுதுப் பார்க்கும் திட்டத்தின் கீழ் 261 பயனாளிகளுக்கு ரூ.125.29 இலட்சம் மதிப்பீட்டிலும் பணிகள் மேற்கொள்வதற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில் மாற்றத்தை கொண்டுவருகின்ற திட்டம் இதுவாகும். இன்னும் இரண்டு ஆண்டுகளில் குடிசை வீடுகள் அனைத்தும் மாற்றியமைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கலைஞரின் அவர்களின் கனவினை நிறைவேற்றும் வகையில் கலைஞரின் கனவு இல்லம் என்ற சீரிய திட்டத்தினை செயல்படுத்தி இருக்கிறார்கள்.

முதலமைச்சரின் காலை உணவுத்திட்டங்களையும் பிற நாடுகள் பின்பற்றுகின்றன். கடந்த வாரம் தமிழ்ப் புதல்வன் என்ற திட்டத்தினை செயல்படுத்தி, 6 முதல் 12 ஆம் வகுப்பு வரையில் அரசுப்பள்ளியில் தமிழ்வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே மாணவிகளுக்கு இத்திட்டமானது புதுமைப் பெண் என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு மாணவிகள் இத்திட்டத்தில் பயன்பெற்று வருகின்றனர்.

இதே போன்று ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பெண்கள் பேருந்துகளில் கட்டணமில்லா பயணம் மேற்கொள்ளும் விடியல் பயணம் என்ற திட்டத்தினை செயல்படுத்தி 3 ஆண்டுகளாக மிக சிறப்பாக நிறை வேற்றப்பட்டு வருகிறது. 500 கோடி கட்டணமில்லா பயணங்களை பெண்கள் மேற்கொண்டுள்ளனர். மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை என்ற சிறப்பான தொரு திட்டத்தினை செயல்படுத்தி மாதந்தோறும் மகளிருக்கு ரூ.1000 உரிமைத் தொகை வழங்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர். விடுபட்ட வர்களுக்கும் உரிமைத்தொகை வழங்கப்படும் என மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தினை செயல்படுத்தியுள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ் நீங்கள் உங்களுடைய வீடுகளை கட்டிக் கொள்வதற்கான வாய்ப்புகளை பெற்றுள்ளீர்கள். மேலும் கலைஞரின் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தினை பின்பற்றியே மத்திய பிரதேச சத்திலும் இதே போன்று திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களைத்தான் மற்ற மாநிலங்களில் செயல்படுத்துகிறார்கள் என்றால் எந்தளவிற்கு மக்களுக்கான திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ள இத்திட்டத்தினை பொதுமக்கள் பயன்படுத்தி தங்களுக்கான வீடுகளை கட்டிக்கொள்ள வேண்டும். பல்வேறு பொருளாதார நெருக்கடிகள் இருந்தாலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்களுக்கான சிறப்பு மிக்க திட்டங்களை தொடர்ந்து செய்படுத்தி வருகிறார்கள். எனவே, வீடுகள் கட்டும் பணிகளை எவ்வித தாமதமும் இல்லாமல் விரைவாக முடித்து பயன்பெற வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார்.

அதனைத் தொடர்ந்து, கூட்டுறவுத் துறையின் சார்பில் அரியலூர் வட்டார கூட்டுறவு விவசாயிகள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் மற்றும் அரியலூர் மாவட்ட பழங்குடியினர் மக்கள் கூட்டுறவு சேவை சங்கத்திற்கு புதியதாக சங்கம் பதிவு செய்யப்பட்டதற்கான பதிவு சான்றிதழ்களையும், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத்திட்ட இயக்குநர் கவிதா, கூட்டுறவுத்துறை மண்டல இணைப்பதிவாளர் தீபாசங்கரி, அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், உடையார் பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, கழக சட்டத்திட்ட திருத்த குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகரன், மு.கணேசன், ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, மா.அன்பழகன், கோ. அறிவழகன், ரெ. அசோகசக்ரவர்த்தி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், நகர செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி, மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், பொதுக்குழு உறுப்பினர் சி.ஆர்.எம்.பொய்யாமொழி, திருமானூர் ஒன்றியக் குழுத் தலைவர் சுமதி அசோகசக்கரவர்த்தி, செந்துறை ஒன்றியக் குழுத் தலைவர் தேன்மொழி சாமிதுரை, ஜெயங்கொண்டம் ஒன்றியக் குழுத் தலைவர் ரவிசங்கர், ஜெயங்கொண்டம் ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் லதா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

'வாட்ஸ் ஆப்'பில் வலம் வரும் கலைஞர் கவிதை!

பதவி பெரிதல்ல!

பதவியொரு முள்மாலை;
இலக்கியப் பணி எனக்கு முல்லைச்சரம்.

பதவியொரு நெடும்பள்ளம்; பொதுப்பணி
எனக்குப் பொதிகைக் குன்றம்.

மானமா; மகுடமா எனக்கேட்டால்
மானத்தை மட்டுமே மதிக்கும் மனிதன் நான்.

கிரீடமா; தலையா எனக்கேட்டால் நான்
கிரீடமே போதுமென இளிக்கின்ற கிறுக்கனல்ல
நான்.

அதனால்தான் உறவுக்குக் கைகொடுப்போம்
என்றுரைத்துப் பதவி துறவுக்கும் தயாராகப்
பத்தாண்டுக்கும் மேல் கழித்தவன் நான்.

பணிபுரியும் வாய்ப்புத்தான் பதவி.

பதவி, பவிசு, படோடோபம் எல்லாமே ஊதிய
பலூனைப்போல் வெடித்துவிடும்;

பண்பார்ந்த தொண்டொன்றே வானைப்போல்
நிலைத்து நிற்கும்.

(தொலைக்காட்சியில் கலைஞர் அவர்கள் பாடிய 'சித்திரைத் திருநாள்' கவிதையிலிருந்து - 14.4.90)

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தலைமையில்

நாமக்கல்லில் கோழியின நோய் கண்டறிதல் கண்காணிப்பு ஆய்வகம்!

ஒன்றிய அரசின் கால்நடை பராமரிப்புத்துறை குழுவினர் ஆய்வு செய்தனர்!

நாமக்கல், ஆக. 15 - நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள கோழியின நோய் கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு ஆய்வகத்தை சர்வதேச தரத்திற்கு இணையாக தரம் உயர்த்துவது குறித்து ஒன்றிய அரசின் கால்நடை பராமரிப்புத்துறை குழுவினர் ஆலோசனைக் கூட்டம் நடத்தி ஆய்வகத்தை ஆய்வு செய்தனர்.

நாமக்கல் மாவட்டம், மோகனூர் சாலை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் கோழியின நோய் கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு ஆய்வகத்தை சர்வதேச தரத்திற்கு இணையாக தரம் உயர்த்துவது குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் மகேஸ்வரி ரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பாராளுமன்ற நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடரில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள கோழியின நோய் கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு ஆய்வகத்தை சர்வதேச தரத்திற்கு இணையாக தரம் உயர்த்துவது குறித்து தமிழ்நாடு கோழி பண்ணையாளர்கள் சங்கம், அகில இந்திய முட்டை ஏற்றுமதியாளர்கள் சங்கம், தமிழ்நாடு முட்டை கோழி பண்ணையாளர்கள் சம்மேளனம், எக் & பவுல்ட்ரி ப்ராடக்ட்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் அசோசியேசன்,

தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகளுடன் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கோழிப்பண்ணைகள், முட்டை உற்பத்தி, முட்டை ஏற்றுமதி மற்றும் கோழிகளை தாக்கக்கூடிய நோய் வகைகள், முட்டை கோழி, கோழி தீவனம் தயாரித்தல், கோழி வளர்ப்பு முறைகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டு கருத்துகளை கேட்டறிந்தனர்.

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய கூட்டரங்கில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தொடர்ந்து, நாமக்கல் ஜித்மித்ரா, இணைச் செயலாளர் மரு.ஓ.பி.சௌத்திரி ஆகியோர் அடங்கிய குழுவினர் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள கோழியின நோய் கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு ஆய்வகத்தை சர்வதேச தரத்திற்கு இணையாக தரம் உயர்த்துவது குறித்து தமிழ்நாடு கோழி பண்ணையாளர்கள் சங்கம், அகில இந்திய முட்டை ஏற்றுமதியாளர்கள் சங்கம், தமிழ்நாடு முட்டை கோழி பண்ணையாளர்கள் சம்மேளனம், எக் & பவுல்ட்ரி ப்ராடக்ட்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் அசோசியேசன், தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு பிரதிநிதிகள், விவசாயிகள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றியம்

பாவந்தூர் ஊராட்சியில் 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம்!

வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றார்!

ரிஷிவந்தியம் ஆக.15. கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றியம் பாவந்தூர் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றார்.

ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றியம் பாவந்தூர் ஊராட்சியில் தமிழக அரசின் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் மனுக்கள் பெறும் முகாம் நடைபெற்றது,

இதற்கு கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமை தாங்கினார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சந்திரசேகரன், நடராஜன், தாசில்தார் பால குரு ஒன்றியக்குழு துணைத் தலைவர் சென்னம்மாள் அண்ணாதுரை, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர், ஒன்றிய குழு பெருந்தலைவர் வடிவுக்கரசி சாமி சுப்பிரமணியன் வரவேற்புரை ஆற்றினார்,

தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க. கார்த்திகேயன் எம்.எல்.ஏ சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றார்.

அப்போது அவர் பேசியதாவது:

திராவிட மாடல் அரசின் நாயகர், கழகத் தலைவர், சமூக நீதி காவலர், தமிழக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கவேண்டும் என்ற தொலைநோக்கு சிந்தனையோடு இந்தியாவுக்கே முன் உதாரணமாக மிகச் சிறப்பான முறையில் மக்களுக்கான ஆட்சி நடத்தி வருகிறார்,

மேலும் கள்ளக்குறிச்சி மாவட்டத்துக்கு தேவைப்படும் அனைத்து வளர்ச்சித் திட்ட பணிகளும் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு முயற்சியின் காரணமாக நமக்கு உடனடியாக கிடைக்கிறது,

அதே போல் மாவட்ட கலெக்டர் உள்ளிட்ட அதிகாரிகளும் சிறப்பாக செயல்பட்டு வருவதால் பொது மக்களின் குறைகள் உடனுக்குடன் தீர்வு காணப்பட்டு வருகிறது,

இது போன்று முகாம்களில் பொதுமக்கள் தங்களின் கோரிக்கை மனுக்களை கொடுப்பதன் மூலம் தங்களின் நியாயமான கோரிக்கைகளை 100% நிறைவேற்றப்படும் என்பது இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்,

கள்ளக்குறிச்சியில் இருந்து சங்கராபுரம் வழியாக திருவண்ணாமலைக்கு ரூபாய் 240 கோடி செலவில் நான்கு வழி சாலை அமைய உள்ளது,

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்தில் அரசு நிகழ்ச்சி மற்றும் கழக பிரமுகர்கள் இல்ல நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் போது பொதுமக்கள் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எப்போது துணை முதல்அமைச்சராக ஆகப்போகிறார்கள் என கேட்கிறார்கள், மக்கள் கேட்கும் கேள்விக்கு நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விரைவில் நல்லதொரு அறிவிப்பை வெளியிடுவார் என உங்களில் ஒருவனாக நானும் காத்திருக்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த முகாமில் ஒன்றிய கழக செயலாளர்கள் பெருமாள், துரைமுருகன், மாவட்ட ஆவின் துணைத் தலைவர் பாலகிருஷ்ணன், வழக்கறிஞர் எல்.ஜி.செந்தில் மற்றும் அரசு அதிகாரிகள் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருவெண்ணைநல்லூர் பேரூராட்சி மன்ற உறுப்பினர் ஷாஜகான் ரஹ்மத்துன் நிஷா அவர்கள் இல்ல திருமண விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். மாவட்ட பொருளாளர் இரா ஜனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் டி என் முருகன், ஒன்றிய செயலாளர் பி.வி. ஆர்.சு.விசுவநாதன், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன் , நகரச் செயலாளர் கோபிகிருஷ்ணன், ஒன்றிய குழுத் தலைவர். ஓம் சிவ சக்திவேல், நகர பொருளாளர் என்.என்.இளங்கோ, இளைஞரணி அமைப்பாளர் செ.தினகரன் , துணைத் தலைவர் ஜோதி, இலக்கிய அணி விஜயபாபு, வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன், பழக்கடை பழனி, தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, கிருஷ்ணராஜ், மாணவர் அணி அன்பழகன், நகர நிர்வாகிகள் சக்தி, காமராஜ், பாக்யராஜ், இளைஞர் அணி நிர்மல், சுரேஷ், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கருப்பு செல்வம், பாபு, செந்தில் முருகன், சதாம் காதர் உசைன், பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி இனயத்துல்லா, சுலைமான் வார்டு செயலாளர்கள் யாசர் அராபத், வெற்றி வேல் செழியன், சிறுவா மணி, ஷாரூக், எடையார் கிளைச் செயலாளர். குணா , பேரூராட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.